


20.01.2025

தலைப்புச்செய்திகள்

- நாட்டின் பாரம்பரிய மரபுகளை பாதுகாக்க கலாச்சார மறுமலர்ச்சியின் அவசியம் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் வலியுறுத்தினார்.
- நிலையான சுழல்பொருளாதாரம் நாட்டின் வளர்ச்சியை முன்னெடுத்துச் சென்று எதிர்கால திட்டமிடலுக்கு பயனளிக்கும் என்று மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.
- உற்பத்தியுடன் கூடிய ஊக்கத்தொகை திட்டத்தின் கீழ் 24 தொழிற்சாலைகள் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- தமிழ்நாட்டில் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் 12 லட்சத்து 80 ஆயிரம் மனுக்களுக்கு தீர்வுகாணப் பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு.KKSSR ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.
- நெதர்லாந்தில் நடைபெறும் செஸ் 3-வது சுற்றில் குகேஷ் அமெரிக்காவின் ஃபேபியோனாவை இன்று எதிர்கொள்கிறார்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖

ஜக்தீப் தன்கர்

நம்நாட்டை அதன் வளமான பாரம்பரியம் மற்றும் தொன்மையான மொழிகளுடன் இணைக்கும் கலாச்சார மறுமலர்ச்சி, தற்போதைய தேவை என்று குடியரசு துணைத் தலைவர் திரு.ஜக்தீப் தன்கர் தெரிவித்திருக்கிறார்.

புதுதில்லியில் இந்திய கலாச்சார வரலாறு குறித்த இந்தியவியல் ஆய்வு மையத்திற்கு இன்று அடிக்கல் நாட்டி பேசியஅவர், உலகளாவிய இந்தியாவின் அறிவுசார் தொடர்பை எடுத்துரைத்தார்.

அமைதி மற்றும் இறையாண்மைக்காக இந்தியா எப்போதும் செயலாற்றி வருவதாக திரு. தன்கர் குறிப்பிட்டார்.

தேசத்தின் பழமையான மொழிகளையும், இலக்கியத்தையும், பாதுகாப்பது மிகவும் முக்கியமானது என்று கூறியஅவர், நம்நாட்டின் கலாச்சார பாரம்பரியம் குறித்து இளையோர் பெருமிதம் கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

காலனி ஆதிக்க கதைகளை சார்ந்திருப்பதை தவிர்த்து உள்நாட்டு உணர்வுடன் நம் பாரம்பரிய வரலாற்றை மறுஆய்வு செய்ய இளையோர்கள் முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

நம் நாட்டின் வரலாறு காலனி ஆட்சியின் போது தவறாக புனையப்பட்டதாக குறைகூறிய அவர், நம் தேசத்தின் கலாச்சாரம் சார்ந்த மரபுகள் அறிவியல் ரீதியானது அல்ல என்று புறக்கணிக்கப்பட்டதாக குற்றம் சாட்டினார்.

இந்திய கலாச்சாரத்தையும், பழங்கால ஆட்சிமுறை கொள்கைகள் குறித்த விழிப்புணர்வையும் மீட்டெடுக்க, இதுதொடர்பான ஆய்வுமையம் சிறப்பான பங்காற்றும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖

பூபேந்தர் யாதவ்

நிலையான சுழற்சி பொருளாதாரம், நம்நாட்டின் வளர்ச்சியை முன்னெடுத்துச் சென்று எதிர்கால திட்டமிடலுக்கு பயனளிக்கும் என்று மத்திய சுற்றுக்சூழல் துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்

புதுதில்லியில் சர்வதேச அளவிலான நிலையான சுழற்சி மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், பொருளாதார சுழற்சி ஆக்கப்பூர்வமான பங்களிப்பை வழங்கமுடியும் என்றார்.

நீடித்த வளர்ச்சிக்கான இலக்கில், மோட்டார் வாகன பிரிவின் பங்கை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த அவர், தூய்மையான மின்உற்பத்தி, சுற்றுச்சூழல் மாசுக்களை குறைக்கும் என்று கூறினார்.

அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம், காடு வளர்ப்போம் திட்டங்களால் காற்றுமாசு பெருமளவு குறையும் என்றும் திரு.பூபேந்தர் யாதவ் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖

டாவோஸ் மாநாடு

சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் 55-வது உலக பொருளாதார கூட்டமைப்பு மாநாடு இன்று தொடங்குகிறது.

இந்த 5 நாள் மாநாட்டில் நாட்டின் உள்ளடக்கிய வளர்ச்சி, மின்னணு புரட்சி போன்றவை குறித்து விரிவாக விவாதிக்கப் படுகிறது.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு.அஸ்விணி வைஷ்ணவ் தலைமையில் மத்திய அமைச்சர்கள் திரு. சி.ஆர்.பாட்டில், திரு. ராம்மோகன் நாயுடு, திரு. சிராக் பாஸ்வான், திரு. ஜெயின் சவுத்ரி உள்ளிட்டோர் இதில் பங்கேற்கின்றனர்.

❖❖❖❖❖❖

மன்சுக் மாண்டவியா

அந்நிய நேரடி முதலீடுகள் மூலம் இலகுவான வர்த்தக நடைமுறைகள் இந்தியாவில் அதிகரித்திருப்பதாக மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தொவித்துள்ளார்.

புதுதில்லியில் அமைப்பு சாரா தொழிலாளர்களை முறைப்படுத்துதல் தொடர்பான 2 நாள் சர்வதேச கருத்தரங்கை இன்று தொடங்கிவைத்து பேசியஅவர், எவ்வித பாகுபாடும் இன்றி அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பை வழுங்குவதே அரசின் நோக்கம் என்றார்.

சுகாதார பாதுகாப்பு திட்டங்களில் 60 கோடி மக்கள் பயனடைவதாகவும், 5 லட்சம் ரூபாய் வரை இலவச மருத்துவ காப்பீடு பெறுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

வர்த்தக தொழில்துறை அமைச்சகம்

நாட்டில் 3 ஆயிரத்து 516 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குளிர்சாதன பெட்டிகள் மற்றும் எல்.இ.டி. விளக்குகள் தயாரிக்கும் 24 தொழிற்சாலைகள், உற்பத்தியுடன் கூடிய ஊக்கத் தொகை திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் ஆன்லைன் மூலம் பெறப்பட்ட 38 மனுக்களை ஆய்வுசெய்து இவை தேர்ந்தெடுக்கப்பட்டதாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சகம் கூறியுள்ளது

இவற்றையும் சேர்த்து உற்பத்தியுடன் கூடிய ஊக்கத்தொகை திட்டத்தின்கீழ் 84 தொழிற்சாலைகள், 10 ஆயிரத்து 478 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகளை ஈர்க்கும் என்று அமைச்சகம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖

ஜோதிர் ஆதித்ய சிந்தியா

புதுதில்லியில் 75-வது அரசியல் சாசன கொண்டாட்டங்களின் ஒருபகுதியாக அஞ்சல்துறை சார்பிலான 3 நாள் தபால்தலை கண்காட்சியை மத்திய தொலைத்தொடர்பு துறை அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா இன்று பார்வையிட்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசியஅவர், நம்நாட்டை வளமான பாதையில் முன்னெடுத்துச் செல்லும் ஒளிவிளக்காக அரசியல் சாசனம் திகழ்கிறது என்று குறிப்பிட்டார்.

நாட்டின் தபால்தலை வரலாறு, அரசியல் சாசனம் போன்றவை குறித்த விழிப்புணர்வு மாணவர்களிடையே ஏற்படுத்த வேண்டும் என்று அமைச்சர் வலியுறுத்தினார்.

❖❖❖❖❖❖

KKSSR

தமிழ்நாட்டில் அரசின் நலத்திட்டங்களை மக்களிடையே கொண்டுசேர்க்கும் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் 12 லட்சத்து 80 ஆயிரம் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு. KKSSR ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இத்திட்டத்தின் மூலம் 15 அரசுத் துறைகளின் சேவைகள் ஒருங்கிணைக்கப்பட்டு பயனாளிகளுக்கு நலத்திட்டங்கள் செயல்படுத்தப் படுவதாக கூறினார்.

நகர்ப்புறங்களில் இந்த திட்டத்திற்கு கிடைத்த வரவேற்பை அடுத்து ஊரகப்பகுதிகளுக்கும் இத்திட்டம் விரிவுப்படுத்தப் பட்டுள்ளதாக கூறியஅவர், 12 ஆயிரத்து 525 கிராம ஊராட்சிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டதாக எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖

முதலமைச்சர்

சிவகங்கை மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் திருச்சி விமான நிலையத்திற்கு நாளை வருகைதரவுள்ளதால் பாதுகாப்பு காரணங்களை கருத்தில் கொண்டு திருச்சியில் ட்ரோன் விமானங்கள் பறக்க தடைவிதிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் நாளை சிவகங்கை மாவட்டத்தில், சுதந்திர போராட்ட வீரர்கள் மருதுபாண்டியர்களுக்கு 50 லட்சரூபாய் மதிப்பீட்டிலான சிலை கட்டுமான பணிகளுக்கு நாளை அடிக்கல் நாட்டுகிறார்.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் 12 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான நூலகத்தையும், திருவள்ளுவர் சிலையும் முதலமைச்சர் திறந்து வைக்கிறார்.

❖❖❖❖❖❖

கே.என்.நேரு

திருச்சி மகாத்மாகாந்தி நினைவு அரசு மருத்துவமனை வளாகத்தில் கட்டப்படவுள்ள காவல் நிலைய புதிய கட்டிடத்திற்கான கட்டுமான பணிகளை மாநில நகராட்சி நிர்வாகதுறை அமைச்சர் திரு.K.N.நேரு இன்று தொடங்கிவைத்தார்.

திருச்சி துறையூரில் இன்றுமாலை பழங்குடியின மாணாக்கருக்கான திறன் மேம்பாட்டு பயிற்சியில் தேர்வு செய்யப்பட்டவர்களை பயிற்சிக்கு அனுப்பும் விழாவில் மாநில ஆதிதிராவிடர் மற்றும் நலத்துறை அமைச்சர் டாக்டர் மதிவேந்தன் இன்றுமாலை பங்கேற்கிறார்.

❖❖❖❖❖❖

எ.வ.வேலு

திருவண்ணாமலை மண்சரிவு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட 20 குடும்பங்களுக்கு தற்காலிமாக அமைக்கப்பட்ட குடியிருப்புகளை பொதுப்பணித் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு இன்று வழங்கினார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிரந்தர குடியிருப்புகள் விரைவில் கட்டித்தரப்படும் என்றார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

பொன்முடி

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாநில அளவிலான வனத்துறை அதிகாரிகளின் ஆலோசனை கூட்டம் மாநில வனத்துறை அமைச்சர் திரு. பொன்முடி தலைமையில் இன்று நடைபெற்றது.

பழங்குடியின மக்களின் பாதுகாப்பு, மலைவாழ் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டு பணிகள் குறித்து அமைச்சர் அதிகாரிகளுடன் இதில் ஆலோசனை மேற்கொண்டார்.

28 லட்ச ரூபாய் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் பழங்குடியினருக்கு அமைச்சர் வழங்கினார்.

❖❖❖❖❖❖

தேர்தல்

டெல்லியில் 70 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு ஒரேகட்டமாக அடுத்தமாதம் 5-ம் தேதி நடைபெறவுள்ள வாக்குப்பதிவிற்கு தாக்கலான வேட்பு மனுக்களை திரும்பபெற இன்று கடைசி நாளாகும்.

இதேபோல் ஈரோடு கிழக்கு மற்றும் உத்தரபிரதேசம் மில்கிபூர் சட்டமன்ற தொகுதிகளுக்கு வரும் 5-ம் தேதி நடைபெறும் இடைத்தேர்தலுக்கான வேட்பு மனுக்களை விலக்கிகொள்ள இன்று இறுதிநாளாகும்

இத்தொகுதிகளில் இறுதி வாக்காளர் பட்டியல் இன்று வெளியிடப்படும். வாக்கு எண்ணிக்கை அடுத்தமாதம் 8-ம் தேதி நடைபெறும்.

❖❖❖❖❖❖

இருவரி

சேலம் மாநகரில் வாகன பதிவு எண் பலகை இல்லாத வாகனங்கள் பறிமுதல் செய்யப்படும் என்று மாநகர காவல்துறை கூடுதல் ஆணையர் திரு. ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சாலைபாதுகாப்பு வாரத்தையொட்டி இருசக்கர வாகனங்களில் பயணிக்கும் அனைவரும் தலைகவசம் கட்டாயம் அணியவேண்டும் என அறிவுறுத்தினார்.

பெரம்பலூரில் இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொதுமக்களிடமிருந்து ஆட்சித்தலைவர் திரு. கிரேஸ்பச்சாவ் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

❖❖❖❖❖❖

நெல்லை

நெல்லை மாவட்டம் பாபநாசம் மேற்கு தொடர்ச்சிமலை வனப்பகுதிக்குள் இன்றுமுதல் கால்நடைகளை வளர்க்க அனுமதி கிடையாது என வனத்துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

❖❖❖❖❖❖

வானிலை

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை மிக தீவிரமடைந்து உள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழ்நாட்டில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

தென்தமிழக கடலோரம், குமரிக்கடல், மன்னார் வளைகுடா பகுதிகளில் பலத்த சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் அடுத்த 3 நாட்களுக்கு மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖

சதுரங்கம்

நெதர்லாந்தில் நடைபெறும் டாடா சதுரங்க போட்டியின் 3-வது சுற்றியில் உலக செஸ் சாம்பியனான குகேஷ், அமெரிக்காவின் Fabiyona-வை இன்று எதிர்கொள்கிறார்.

பிற போட்டிகளில் அர்ஜுன் எரிகேசி - பிரக்ஞானந்தா உடனும்,

லியோன் லியூக் - பென்ட்டாலா ஹரிக்கிருஷ்ணா உடனும் மோதுகின்றனர்.

❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.